www.tamilarangam.net

அன்று தோழர் றேகன்.....

# மீண்டும் ஒரு தோழன்
# சோ. ஜெகநாதன் (அமீன்)

## இன்னும் எத்தனை தடவைகள் இப்படி நடக்கும்.....

**இன்று (20-2-86) அதிகாலை 1-30 மணியளவில் தோழர் அமீனை சக இயக்கமொன்றின் துப்பாக்கி வேட்டுக்கள் பலியெடுத்தன.**

நேற்று மாலை எதிர்ப்படைகள் எம் மக்கள் மீது மேற்கொண்ட விமானத்தாக்குதல்களுக்கு பதிலடி கொடுப்பதற்காக கோட்டை முகாம் மீது தாக்குதல் நடத்திட மக்கள் விடுதலைப்படைத் தோழர்கள் சென்றனர்.

கோட்டை முகாமை சுற்றியுள்ள பகுதிகளில் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் காவலர் குழுவிடம் எமது தோழர்கள் தம்மை இனம் காட்டிவிட்டு கோட்டை முகாமை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தனர். இவ்வேளையில் எமது தோழர்கள் சென்று கொண்டிருந்த பகுதியிலிருந்து 50 யார் முன்பாக நின்றுகொண்டிருந்த தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மற்றொரு குழுவினர் எமது தோழர்களை நோக்கி எவ்வித எச்சரிக்கையும் செய்யாமலேயே துப்பாக்கிப் பிரயோகம் செய்யத் தொடங்கினர்.

இவ்வேளையில் எமது தோழர்கள் சமிக்ஞை மூலமும், உரத்த சப்தமிட்டும் தம்மை இனம் காட்டினர். எதிரே நின்றவர்கள் சக இயக்கத்தவர் என்பதை தெளிவாக இனம் கண்டு கொள்ளக்கூடியதாக இருந்ததால் எமது தோழர்கள் பதில் தாக்குதல் எதுவும் மேற்கொள்ளவில்லை.

எமது தோழர்கள் தம்மை இனம் காட்டிய போதும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தொடர்ந்து மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் எமது உன்னத தோழரும் சர்வதேச விடுதலை இயக்க மொன்றின் பாசறையில் பயிற்சி பெற்றவருமான தோழர் அமீன் கொல்லப்பட்டார்.

**எங்கள் தோழன் கொல்லப்பட்டதும், தோழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகமும் திட்டமிட்ட வகையில் நடைபெற்றதென்றே கருதுகின்றோம்.**

ஏனெனில்,



தோழர் அமீன்

கடந்த காலத்திலும் விடுதலைப்புலிகள் இயக்கத்தவரால் சர்வதேச விடுதலை இயக்கமொன்றின் பாசறையில் பயிற்சி பெற்றவரான வன்னிப்பிராந்திய தளபதி தோழர் றேகன் படுகொலை செய்யப்பட்டமை, மேலும் பல கசப்பான அனுபவங்கள்.

யாழ்ப்பாணத்தில் கோட்டை முகாமை சுற்றி கண்காணிப்பில் ஈடுபட்டுள்ள எமது தோழர்கள் மிரட்டப்படல்

கோட்டை முகாமை நோக்கி சென்று கொண்டிருந்த எமது தோழர்கள் முதலில் நின்றிருந்த விடுதலைப்புலிகள் இயக்கத்தவர்களுக்கு தம்மை இனம் காட்டிவிட்டே தொடர்ந்து சென்றதால் முன்னால் நின்றிருந்த தமது சகாக்களுக்கு எமது தோழர்கள் வரும் செய்தி கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

காவலில் ஈடுபட்டுள்ள எந்தக் குழுவும் முதலில் எச்சரிக்கை செய்து, வருவது எதிரிகள் என்று உறுதி செய்த பின்பே துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டும். ஆனால் குறிப்பிட்ட குழுவினர் எவ்வித எச்சரிக்கையையும் செய்யவில்லை என்பதுடன், எமது தோழர்கள் தம்மை இனம் காட்ட எடுத்த நடவடிக்கைகளையும் அலட்சியம் செய்துள்ளனர்.

எமது தோழர்கள் சாதாரண உடையில் காணப்பட்டதோடு நின்றிருந்த பகுதியில் வெளிச்சமும் இருந்தது.

இக் காரணங்களால் எங்கள்தோழன் கொல்லப்பட்டது ஒரு திட்டமிட்ட நடவடிக்கையென்றே நாம் கருதுகிறோம்.

நாம் நேசிக்கும் மக்களின் விடுதலையை வென்றெடுக்க காத்திரமிட்டில் கரம்கோர்க்க வேண்டியவர்கள் முரண்பட்டுக் கொள்வதும், மோதிக்கொள்வதும் எதிரிக்கு வலுவூட்டும் என்பதால் எமது உன்னத தோழனை பறிகொடுத்த போதும் நிதானமிழக்காமல் செயற்படுகிறோம்.

எமது தோழன் கொல்லப்பட்டமை தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் மேற்கொள்ளும் நடவடிக்கையை பொறுத்தே இது தொடர்பான எமது நடவடிக்கைகளும் அமையும்.

## வீரவணக்கம்



தோழனே உனது மரணம்
மிகவும் கொடியது.
விழிகளில் எம்மிடம் கண்ணீர் இல்லை
எம்மையே உனக்கு அர்ப்பணம் செய்கிறோம்.
நீ நேசித்த மக்களின் விடுதலையை
வென்றெடுக்கும் வரை ஓயமாட்டோம்.

என்றும் நாம் வெற்றிக்காக

மக்கள் விடுதலைப் படை (PLA)

ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணி (EPRLF)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்